தினமணி

# வியாபாரிகள் இன்று கடையடைப்பு

First Published : 01 Dec 2011 03:48:44 AM IST




*சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் மத்திய அரசின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கர்நாடக மாநிலம் பெங்களூரில் புதன்கிழமை ஆர்ப்*

சென்னை, நவ. 30: சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டை அனுமதிப்பது என்கிற மத்திய அரசின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழகம் முழுவதும் வியாழக்கிழமை முழுக் கடையடைப்புப்
போராட்டம் நடைபெறவுள்ளது.

இதனால் மளிகைக் கடை, காய்கறிக்கடை, சந்தைகள், நகைக் கடைகள், துணிக் கடைகள் என அனைத்துக் கடைகளும் வியாழக்கிழமை திறந்திருக்காது.

சில்லறை வர்த்தகத்தில் 51 சதவீத அன்னிய நேரடி முதலீட்டுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கு நாடு முழுவதும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் இந்த முடிவுக்கு எதிர்க்கட்சிகளும், காங்கிரஸின் கூட்டணி கட்சிகளான திமுக, திரிணமூல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டை தமிழகத்தில் அனுமதிக்க முடியாது என்று முதல்வர் ஜெயலலிதா திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், செவ்வாய்க்கிழமை தில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீட்டை அனுமதிப்பதை திரும்பப் பெற இயலாது என பிரதமர் மன்மோகன் சிங் பேசியிருப்பது, அனைத்து தரப்பினரிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால், மத்திய அரசு தனது முடிவை திரும்பப் பெறும் வரை போராட்டம் தொடரும் என வணிகர் சங்கங்கள் எச்சரித்துள்ளன. தமிழகத்தில் திட்டமிட்டபடி கடையடைப்புப் போராட்டத்தை நடத்த வணிகர் சங்கங்கள் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன.

ரூ. 40 கோடிக்கும் மேல் அரசுக்கு வருவாய் இழப்பு: இதுகுறித்து தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் வெள்ளையன் கூறியது:

வால்மார்ட் உள்ளிட்ட பெரிய நிறுவனங்களை சில்லறை வர்த்தகத்தில் அனுமதிப்பது, வர்த்தகர்களின் வாழ்வாதாரத்தையே பாதித்துவிடும். பொதுமக்களும் கடுமையாகப் பாதிக்கப்படுவர்.

எனவே, இதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வியாழக்கிழமை நடத்தப்படும் கடையடைப்புப் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பு கடைக்காரர்களும் ஒத்துழைப்பு தருவதாக தெரிவித்துள்ளனர்.

நகைக் கடை உரிமையாளர்களும், கோயம்பேடு மார்க்கெட் உள்ளிட்ட சந்தை வணிகர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனால், மளிகைக் கடைகள் மட்டுமின்றி, நகைக் கடைகள், சந்தைகள், துணிக் கடைகள் என அனைத்து வகைக் கடைகளும் அடைக்கப்படும்.

தமிழகம் முழுவதும் உள்ள 25 லட்சத்துக்கும் மேலான கடைகள் வியாழக்கிழமை அடைக்கப்படும். இதனால் அரசுக்கு ரூ. 40 கோடிக்கும் மேல் வரி வருமான இழப்பு ஏற்படும் என்றார்.

போராட்டம் தொடரும்: நாடே எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில் சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டை அனுமதிப்பதை திரும்பப் பெற இயலாது என பிரதமர் மன்மோகன் சிங் பேசியிருப்பது, வாழ்வாதாரம் பறிபோய்விடுமோ என்கிற அச்சத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் கோடிக்கணக்கான வணிகர் குடும்பங்களை மேலும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது.

எனவே, மத்திய அரசு தனது முடிவினை திரும்பப் பெறும்வரை வணிகர்கள் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் விக்கிரமராஜா கூறியுள்ளார்.

பல்வேறு தரப்பினர் ஆதரவு: வணிகர்களின் கடை அடைப்புப் போராட்டத்துக்கு கட்சியினர், தொழிற்சங்கங்கள் என அனைத்துத் தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். மார்க்சிஸ்ட் உள்ளிட்ட இடதுசாரி கட்சிகள், சமத்துவ மக்கள் கட்சி, பாமக உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் ஏற்கெனவே ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்த நிலையில் வங்கி ஊழியர்கள் சம்மேளனம், காப்பீடு கழக ஊழியர் சங்கம் உள்ளிட்ட தொழிற்சங்கங்களும் இப்போது ஆதரவு தெரிவித்துள்ளன. ஏற்கெனவே அன்னிய நேரடி முதலீட்டால் வங்கி, காப்பீடு உள்ளிட்ட ஏராளமான துறைகளின் சேவைகள், பொதுமக்களுக்கு பாதகமாக மாற்றப்பட்டுள்ளன.

இதற்காக தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறோம். எனவே, வணிகர்கள் இப்போது அறிவித்துள்ள போராட்டத்துக்கு வங்கி ஊழியர் சம்மேளனம் முழு ஆதரவை தெரிவிக்கிறது என அதன் செயலாளர் சே.ப. கிருஷ்ணன் கூறியுள்ளார்.

இதுபோல், வணிகர்களுக்கு ஆதரவு தெரிவித்து சென்னை அண்ணா சாலையில் அமைந்துள்ள எல்.ஐ.சி. கட்டட வளாகத்தில் ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளதாக காப்பீடு கழக ஊழியர் சங்க பொதுச் செயலாளர் எஸ். ரமேஷ்குமார் கூறியுள்ளார்.

---

## எண்ணெய் பனை பயிரிட்டால் ரூ.1 லட்சம் அரசு மானியம்

First Published : 01 Dec 2011 12:08:00 AM IST



*எண்ணெய் பனை*

விழுப்புரம்: எண்ணெய் பனை பயிரிட்டால் ரூ.1 லட்சம் அரசு மானியம் வழங்கப்படுவதாக விழுப்புரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

விழுப்புரம் மாவட்டத்தில் எண்ணெய் பனை பயிர் கடந்த 5 ஆண்டுகளாக சுமார் 2,500 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு எண்ணெய் பனை பயிரிடும் விவசாயிக்கு அரசு ரூ.1 லட்சம் மானியம் வழங்குகிறது.

ஒரு எக்டேருக்குத் தேவையான எண்ணெய் பனை கன்றுகள் வாங்க ரூ.9,998, பயிரிடும் வயலுக்குச் சொட்டு நீர் பாசனக் கருவிகள் அமைக்க ரூ.15,000 மானியம். எண்ணெய் பனையுடன் மணிலா, பயறு, கரும்பு போன்ற பயிர்களை ஊடுபயிராகப் பயிரிடத் தேவையான இடுபொருள்களுக்கு ரூ.10,000 மானியமாக வழங்கப்படுகிறது. பயிர் பதுகாப்பு மருந்துகள் நுண்ணுரம் முதலியவற்றுக்கு ரூ.5,000, எண்ணெய் பனை பயிரிட்ட வயலுக்கு பாசன வசதி அளித்திட புதிதாகக் குழாய் கிணறு அமைக்க விரும்பினால் ரூ.50,000 மானியம் மற்றும் சிறிய அளவில் மண்புழு உரத்தொட்டி அமைக்க ரூ.15,000 மானியமாக ஒரே விவசாயிக்குக் கிடைக்கும்.

எனவே விவசாயிகள் அரசு அளிக்கும் மானியத்தைப் பயன்படுத்தி எண்ணெய் பனை பயிட்டு பயன்பெறலாம்.

இது தொடர்பாக மேலும் விவரம் அறிய விரும்பும் விவசாயிகள். தங்கள் பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள், வேளாண்மை விரிவாக்க மையங்கள் அல்லது 04146-222291 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார் ராஜேந்திரன்.

---

# மழைக் காலத்தில் பயிர்ப் பாதுகாப்பு முறைகள்

First Published : 01 Dec 2011 12:06:00 AM IST



பெரம்பலூர்: மழைக் காலத்தில் பல்வேறு பயிர்களைப் பாதுகாக்கும் முறைகள் குறித்து பெரம்பலூர் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். இரா. மாரிமுத்து கூறியது:

தற்போது தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழையால், அனைத்துப் பயிர்களின் வயல்களிலும் மழை நீர்த் தேங்கிக் காணப்படுகிறது. இதனால், பாக்டீரியம், பூஞ்சாணம் போன்றவற்றால் பயிர்களுக்கு நோய்த் தாக்குதல் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

குறிப்பாக, பருத்தியில் வெர்டிசீலியம் வாடல் நோய், வேர் அழுகல் நோய், ஆல்டர் நேரியா, இலைப்புள்ளி நோய், இலைக்கருகல் நோய், புகையிலைக் கீற்று வைரஸ் நோய் ஆகிய நோய்கள் தாக்கும் அபாயம் உள்ளது.

மேலும், செடிகளிலுள்ள சப்பைகள், காய்கள் அழுகி உதிர வாய்ப்புள்ளது. பருத்தி வயல்களில் தேங்கியுள்ள மழை நீரால், மெக்னீசியம் சத்துப் பற்றாக்குறை ஏற்பட்டு, பருத்தி இழையின் ஓரங்கள் சிவப்பு நிறமாக மாறி உதிர்ந்து விடுகின்றன. இதனால், விவசாயிகளுக்கு மகசூல் இழப்பு ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

பருத்தியை மழை நீரிலிருந்து பாதுகாக்க, வயல்களில் தேங்கும் நீரை, ஐந்து பாத்திகளுக்கு இடையே பார் அமைத்து, வயலைச் சுற்றி வடிகால் வசதி செய்து தேங்கிய நீரை வெளியேற்ற வேண்டும்.

பருத்திச் செடிகளில் வேர் அழுகல் நோய் காணப்படும் போது, சூடோமோனாஸ் அல்லது டிரைகோடெர்மா விரிடி உள்ளிட்ட எதிர் உயிர்க் கொல்லிகளில் ஏதாவது ஒன்றை லிட்டருக்கு 2 கிராம் அல்லது கார்பன்டாசிம் அல்லது மேன்கோசெப் பூஞ்சாணக் கொல்லி மருந்துகளில் ஏதாவது ஒன்றை லிட்டருக்கு 2 கிராம் அல்லது காப்பர்

ஆக்ஸிகுளோரைடை லிட்டருக்கு 2 கிராமுடன், பாக்டீரியா கொல்லியான ஸ்டிரெப்டோமைசின் சல்பேட்டை பத்து லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் என்ற அளவில் கலந்து, செடிக்குச் செடி வேர் பகுதிகளில் ஊற்றுவதன் மூலம், வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

பருத்தி இலைகளில் இலைப்புள்ளிகள் தென்படும் போது, காப்பர் ஆக்ஸிகுளோரைடு 30 கிராம், ஸ்டிரெப்டோமைசின் சல்பேட் ஒரு கிராம் ஆகியவற்றை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து, 10-15 நாள்கள் இடைவெளியில் இலையின் மீது தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

மேலும், மழை நின்ற பிறகு, செடிகள், சப்பைகள் நன்கு செழிப்புடன் இருக்க, வளர்ச்சி ஊக்கி அல்லது டி.ஏ.பி. 2 சதக் கரைசலைத் தெளிக்க வேண்டும். பருத்தியில் இலைகள் சிவப்பாக தென்படும் போது, மெக்னீசியம் சல்பேட் 100 கிராம், ஜிங் சல்பேட் 50 கிராம், யூரியா 10 கிராம் ஆகியவற்றை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு செய்வதன் மூலம் மழையிலிருந்து பருத்தியைக் காப்பாற்றி அதிக மகசூலைப் பெறலாம். தற்போது சிறிய வெங்காயப் பயிரைக் குமிழ் அழுகல் நோய் அதிகமாகத் தாக்கியுள்ளது. இந்த நோயானது பூஞ்சை மூலம் பரவுகிறது. இந்தப் பூஞ்சையைக் கட்டுப்படுத்த, குளோரோதலோனில் பூஞ்சாணக் கொல்லியை லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் அல்லது மாங்கோசெம் பூஞ்சாணக் கொல்லியை 2.5 கிராம் என்ற அளவில் கலந்து, அதனுடன் ஒட்டும் திரவம் சேர்த்துத் தெளிக்க வேண்டும்.

மஞ்சள் பயிரில் இலைப்புள்ளி, இலைக்கருகல் நோய் காணப்படும் போது, புரபிகோனோசால் 20 மில்லி அல்லது சூடோமைல் 20 கிராம் அல்லது பெவிஸ்டின் 20 கிராம் அல்லது அலைட் 20 கிராம் இதில் ஏதாவது ஒன்றை 10 லிட்டர் தண்ணீரில் 5 மி.லி. ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

மக்காச்சோளம், நெல், மஞ்சள், கரும்பு ஆகியவை பயிரிடப்பட்டுள்ள வயல்களில் தேங்கியுள்ள மழை நீரை, தகுந்த வடிகால் வசதி செய்து வெளியேற்றினால், பயிர்களைக் காப்பாற்றலாம்.

இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை நேரில் அல்லது 04328-293251, 293592 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## பயிருக்கு உரத்தை பிரித்து இட யோசனை

டிசம்பர் 01,2011,01:19 IST

கோபிசெட்டிபாளையம்: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் பயிரில் அதிக மகசூல் பெற, மேலுரத்தை பிரித்து இடுமாறு வேளாண் துறை தெரிவித்துள்ளது. கோபி வேளாண் உதவி இயக்குனர் (பொறுப்பு) ஆசைத்தம்பி அறிக்கை: கோபி வட்டாரத்தில் கீழ்பவானி மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதியில் இரண்டாம் போகத்தில், 11 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலுரமாக தழை மற்றும் சாம்பல் சத்துக்களை இடும் பணி நடக்கிறது. நெல்லில் நல்ல மகசூல் கிடைக்க மேலுரத்தை மூன்று சம பாகங்களாக பிரித்து இடவேண்டும். நடவு செய்த 15ம் நாளில் 33 கிலோ யூரியா மற்றும் 12 கிலோ பொட்டாஷ் உரம் இட வேண்டும். 30ம் நாளில் 33 கிலோ யூரியா, 12 கிலோ பொட்டாஷ் உரம் சேர்த்து இட வேண்டும்.

ஒரே முறை அதிக அளவு உரங்களை இடாமல், பல முறை பிரித்து இடும்போது சத்துக்கள் வீணாவது குறைக்கப்படுகிறது. தூர் கட்டும் பருவம், கதிர் உருவாகும் பருவம், கதிர் வெளிவரும் பருவங்களில் உரங்களை இடுவதால் சமச்சீர் சத்து பயிருக்கு கிடைத்து, அதிக மகசூல் கிடைக்கிறது.

---

## மழையால் பாதித்த நெற்பயிர்களை காக்க வேளாண் துறை ஆலோசனை

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் மாவட்டத்தில் சம்பா மற்றும் தாளடி நெற்பயிர்கள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதிலிருந்து

நெற்பயிரை காக்கும் முறை குறித்து வேளாண்துறை இணை இயக்குனர் சேகர் வெளியிட்ட அறிக்கை: தண்ணீர் தேங்கியுள்ள நெல் வயல்களில் உரிய வடிகால் வசதிகளை ஏற்படுத்த வேண்டும். மழையால் நாற்றுகள் அரித்து சென்ற பகுதிகளில், அதிக நாற்றுகள் உள்ள குத்துகளிலிருந்து சில நாற்றுகளை படுங்கி நடவு செய்ய வேண்டும். அல்லது அதே ரக நாற்றுகள் கிடைத்தால் நடவு செய்யலாம். நீரில் மூழ்கியுள்ள நெற்பயிர்களுக்கு உடனடியாக 200 லிட்டர் தண்ணீரில் இரண்டு கிலோ யூரியா, ஒரு கிலோ சிங்க் சல்பேட் கலந்து கை தெளிப்பான் மூலம் காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்கவேண்டும். தண்ணீர் வடிந்து விட்ட நிலையில், ஊட்டச்சத்து பற்றாக்குறை ஏற்படும் வாய்ப்புள்ளது.

எனவே, நெற்பயிருக்கு ஏக்கருக்கு 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம் நான்கு கிலோ வேப்பம் புண்ணாக்கு கலந்து ஒரு நாள் வைத்திருந்து பிறகு 17 கிலோ பொட்டாஷ் கலந்து மேலுரமாக இடவேண்டும். இந்த உரங்களை இடும்போது வயலில் சீராக தண்ணீர் வைத்துக்கொள்வதுடன், நீர் வெளியேறாதவாறு பராமரிக்க வேண்டும். சூள் கட்டும், பூக்கும் பருவத்தில் உள்ள பயிர்களுக்கு, இரண்டு கிலோ டிஏபி உரத்தை 10 லி., தண்ணீரில் ஊற வைத்து மறுநாள் தெளிவான கரைசலை மட்டும் வடிகட்டி அதோடு ஒரு கிலோ யூரியா, ஒரு கிலோ பொட்டாஷ் கலந்து 190 லி., தண்ணீர் சேர்த்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். இவ்வாறு ஊட்டச்சத்து மேலாண் செய்வதால் மழைநீரால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை காக்கலாம்.

---

## ரூ.277 கோடி பயிர்க்கடன் வழங்க இலக்கு: கூட்டுறவு சங்கங்களின் அதிகாரி தகவல்

கும்பகோணம்: ""விவசாயிகளுக்கு 277 கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 213 கோடி கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகை வரும் மார்ச்சுக்குள் வழங்கப்படும்," என்று கூட்டுறவு சங்கங்களின் அதிகாரி தெரிவித்தார். தஞ்சை மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் அந்தோணிசாமி பீட்டர் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியில் அளித்த பேட்டி: விவசாயிகள் இரண்டு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளனர். ஐந்து ஏக்கருக்கு குறைவாக

நிலம் வைத்திருப்பவர்கள் சிறு குறு விவசாயி என்றும், ஐந்து ஏக்கருக்கு மேல் வைத்திருப்பவர்கள் பெரிய விவசாயிகள் என்றும் தேசிய அளவில் கொள்கை முடிவாக உள்ளது.

தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் மொத்தம் 502 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் உள்ளது. அதில் கட ன் பெறும் ஒவ்வொரு விவசாயியும் பங்குதாரராக உள்ளனர். இச்சங்கம் லாபத்தில் செ யல்படுவதும், நலிவடைவதும் விவசாயிகள் கையில்தான் உள்ளது. ஒவ்வொரு விவசாயியும் இச்சங்கங்களில் பங்குதாரர்களாக உள்ளனர். ஒருமுறை பங்கு தொகை செலுத்திவிட்டால் ஒவ்வொரு முறை கடன் வாங்கும்போதும் பங்கு தொகை செலு த்த வேண்டியதில்லை. சில சங்கங்களில் ஒவ்வொரு முறையும் பங்கு தொகை செலுத்தக்கோரி நிர்பந்தபடுத்துவதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர். இத்தகைய சங்கங்களிடம் விசாரித்து புதிதாக பங்கு தொகை வசூலிப்பது தவிர்க்கப்படும். கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு சலுகை விலையில் வழங்கப்படும் உரம், யூரியா, காம்ப்ளக்ஸ் மூட்டைகளை வெளி மார்க்கெட்டிலும், தனி நபர்களிடமும் கூடுதல் விலைக்கு விற்பதாக புகார் வருகிறது. கையும் களவுமாக பிடித்து கொடுக்கும் விவசாயிகளுக்கு சன்மானம் வழங்கப்படுவதுடன் வாங்கும் மற்றும் விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்திற்கு ஆண்டுதோறும் 1,150 கோடி ரூபாய் பலவகையான கடன்கள் வழ ங்க தேவைப்படுகிறது. அதில், விவசாயத்திற்கு மட்டும் ரூ.972 கோடி தேவைப்படுகிறது. நடப்பாண்டில் இம்மூன்று மாவட்டங்களிலும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ.277 கோடி பயிர் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதில், இதுவரை 73 ஆயிரத்து 351 விவசாயிகள் ரூ.213 கோடி கடன் தொகையை பெற்றுள்ளனர். மீதமுள்ள தொகை ரூ.64 கோடி மார்ச் மாதத்திற்குள் வழங்கப்பட உள்ளது. இவ்வாறு அந்தோணிசாமி பீட்டர் கூறினார்.

---

## கால்நடை நோய் குறித்த ஆராய்ச்சி : மதுரை காமராஜ் பல்கலை தேர்வு

மதுரை : தேசிய அளவில் கால்நடை நோய் தொடர்பான ஆராய்ச்சிக்கு, மதுரை காமராஜ் பல்கலை தேர்வு செய்யப்பட்டுள்ளது. கால்நடைகளில் இருந்து மனிதர்களுக்கு

பரவக்கூடிய ஒருவகை நோய் "ப்ரூசெல்லோசிஸ்'. ஒருவகை பாக்டீரியாவால் தோன்றும் இந்நோய் உலகில் பலபகுதிகளில் காணப்படுகிறது. இந்நோய் தாக்கப்பட்ட கால்நடைகளுக்கு கருக்கலைதல், மலட்டுத்தன்மை போன்ற அறிகுறிகள் தென்படும். பெரும்பாலும் கால்நடைகளுடன், நீண்ட நேரம் தொடர்புடையவர்களுக்கும், காய்ச்சாத பால் குடிப்பவர்களுக்கும், சரிவர சமைக்கப்படாத இறைச்சியை உண்போருக்கும் இந்நோய் எளிதாக பரவும். இந்நோயின் தாக்கம் இந்தியாவின் சில பகுதிகளில் இருந்தபோதிலும், உரிய ஆய்வக பரிசோதனைகளோ, கால்நடைகளுக்கான தடுப்பு மருந்துகளோ இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. மேலும் கால்நடைகளுக்கான தடுப்பு மருந்துகள் மனிதர்களுக்கு நோயை உண்டாக்கு கின்றன.

எனவே மத்திய அரசின் உயிர் தொழில்நுட்பவியல் துறை தேசிய அளவில் மதுரை காமராஜ் பல்கலை உள்ளிட்ட 8 ஆராய்ச்சி மையங்களை ப்ரூசெல்லோசிஸ் ஆய்வுக்காக தேர்ந்தெடுத்துள்ளது. மதுரை பல்கலையின் உயிரியல் துறை "ஜீனோமிக்ஸ்' என்றழைக்கப்படும் மரபுத் தொகுப்பியல் ஆராய்ச்சியில் சர்வதேச அளவில் சிறந்து விளங்குகிறது. இந்த ஆண்டு முதல் 5 ஆண்டு ஒருங்கிணைந்த எம்.எஸ்சி., மற்றும் பி.எச்டி., படிப்பை இந்தியாவிலேயே இப்பல்கலையின் உயிரியல் துறை வழங்கி வருகிறது. எனவே மத்திய அரசின் உயிர்தொழில்நுட்பவியல் துறை, இந்நோய்க்கான மூலக்கூறு மற்றும் மூலாதார மற்றும் ஒருங்கிணைப்பு மையமாக மதுரை காமராஜ் பல்கலையை நியமித்துள்ளது. மரபியல் துறையின் உதவி பேராசிரியர் ஜெ.ராஜேந்திரன், முதுநிலை பேராசிரியர் குணசேகரன் ஆராய்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக செயல்படுவர். அவர் கூறுகையில், ""அமெரிக்க விஞ்ஞானிகள் பரூண்டே, ரமேஷ்வேமுளபள்ளி ஆகியோர் இந்த ஆராய்ச்சியின் சர்வதேச ஆலோசகர்களாக செயல்படுவர். ஆராய்ச்சியின் மூலம் நவீன பரிசோதனை முறை, தடுப்பு மருந்துகள் கண்டறியப்படும்," என்றார்.

---

## சில்லரை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டுக்கு எதிராக இந்தியா முழுவதும்

## இன்று கடையடைப்பு போராட்டம்

## தமிழ்நாட்டில் 20 லட்சம் கடைகள் மூடப்பட்டு இருக்கும்

**சில்லரை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று (வியாழக்கிழமை) இந்தியா முழுவதும் கடையடைப்பு போராட்டம் நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் 20 லட்சம் கடைகள் மூடப்பட்டு இருக்கும் என்று வியாபாரிகள் தெரிவித்து உள்ளனர்.**

புதுடெல்லி, டிச.1–

சில்லரை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டுக்கு மத்திய மந்திரி சபை சமீபத்தில் அனுமதி வழங்கியது.

மத்தியில் ஆளும் காங்கிரஸ் கூட்டணி அரசின் இந்த முடிவால் வால்மார்ட், டெஸ்கோ, கேரிபோர் போன்ற பெரிய சூப்பர்மார்க்கெட் நிறுவனங்கள் இந்தியாவில் தங்களது கடைகளை திறக்க வழிஏற்படும்.

நாடு முழுவதும் எதிர்ப்பு

மத்திய அரசின் இந்த முடிவுக்கு நாடு முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பி உள்ளது. பாரதீய ஜனதா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, பகுஜன் சமாஜ், சமாஜ்வாடி, பார்வர்டு பிளாக், ஆளும்காங்கிரஸ் கூட்டணியில் இடம் பெற்றுள்ள திரிணாமுல் காங்கிரஸ், தி.மு.க. ஆகிய கட்சிகளும் அன்னிய நேரடி முதலீட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து உள்ளன.

அரசின் முடிவால், உள்நாட்டில் உள்ள வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே உடனடியாக மத்திய அரசு தனது முடிவை வாபஸ் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, இன்று (வியாழக்கிழமை) நாடு முழுவதும் கடையடைப்பு போராட்டம் நடத்த வர்த்தகர்கள் முடிவு செய்துள்ளனர். அகில இந்திய வியாபாரிகள் சங்க கூட்டமைப்பு இந்த கடையடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது. வர்த்தகர்களின் இப்போராட்டத்துக்கு பாரதீய ஜனதா, கம்யூனிஸ்டு கட்சிகள், பாட்டாளி மக்கள் கட்சி, ம.தி.மு.க. ஆகியவை ஆதரவு தெரிவித்து உள்ளன.

10 ஆயிரம் வர்த்தக நிறுவனங்கள்

அகில இந்திய அளவில் நடைபெறும் இந்த கடையடைப்பு போராட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்கள் பங்கேற்பதாக அகில இந்திய வியாபாரிகள் சங்க கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. டெல்லியில் ஜந்தர் மந்தர் பகுதியில் வியாபாரிகள் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டம் நடத்துவார்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

நாட்டின் அனைத்து மாநிலங்களிலும் வியாபாரிகள் கடைகளை அடைத்து, கண்டன பேரணி நடத்தி, 'சில்லரை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீடு' என்னும் கொடும்பாவியை எரிப்பார்கள் என்று, அகில இந்திய வியாபாரிகள் கூட்டமைப்பின் தலைவர் பி.சி.பார்த்தியா, பொதுச்செயலாளர் பிரவீன் கண்டேல்வால் ஆகியோர் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டில் 20 லட்சம் கடைகள்

தமிழகத்தில் சில்லரை வணிகத்தில் அன்னிய முதலீட்டை அமல்படுத்தப்போவதில்லை என்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டு உள்ளார். முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் அறிவிப்புக்கு தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை தலைவர் த.வெள்ளையன், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா ஆகியோர் வரவேற்பு தெரிவித்து உள்ளனர்.

அதேநேரத்தில் அகில இந்திய அளவில் நடைபெறும் கடையடைப்பு போராட்டத்தில் பங்கேற்க போவதாக அறிவித்துள்ளார். கடையடைப்புடன் உண்ணாவிரத போராட்டமும் நடைபெறும் என்று வெள்ளையன் கூறியிருக்கிறார். இதன்காரணமாக தமிழ்நாட்டில் இன்று (வியாழக்கிழமை) 20 லட்சம் கடைகள் மூடப்பட்டு இருக்கும் என்று வியாபாரிகள் சங்கத்தினர் தெரிவித்தனர். போராட்டத்தையொட்டி கோயம்பேடு மொத்த மார்க்கெட்டும் மூடப்பட்டிருக்கும் என்று காய்கறி, பழம், பூ விற்பனையாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் தெரிவித்து உள்ளனர். இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் எம்ளாயிஸ் யூனியன் சார்பில் எல்.ஐ.சி. வளாகத்தில் இன்று ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அந்த சங்கம் முடிவு செய்துள்ளது. இதில் வெள்ளையன் கலந்து கொள்கிறார்.

பால் விற்பனை இல்லை

பால் முகவர்கள் சங்கமும் வணிகர்கள் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளது. உண்ணாவிரத போராட்டத்தில் கலந்து கொள்ளப்போவதாகவும் பால் முகவர்கள் நலச்சங்க தலைவர் எஸ்.ஏ.பொன்னுசாமி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறும்போது, ‘சில்லரை விற்பனை கடைகளை வைத்து தான் நாங்கள் பாலை கொள்முதல் செய்து, கடைகளுக்கு சப்ளை செய்து வருகிறோம். இதன்மூலம் 80 சதவீத பால் விற்பனையாகும். சில்லரை வணிகத்தில் அன்னிய முதலீடு வரும் போது எங்களின் நிலையும் பாதிக்கப்படும். ஆகவே நாங்கள் இன்று பாலை கொள்முதல் செய்ய மாட்டோம். கடைகளிலும் பால் விற்பனை இருக்காது’ என்று கூறியுள்ளார்.

பால் முகவர்கள் சங்கமும் போராட்டத்தில் ஈடுபடுவதால் சென்னையில் இன்று ஒருநாள் பால் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இறைச்சி கடைகள் அடைப்பு

கடையடைப்பு போராட்டத்தில் ஓட்டல்கள் சங்கம் பங்கேற்காது என்று அதன் தலைவர் ஸ்ரீனிவாச ராஜா தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு கீழ் செயல்படும் ஓட்டல்கள் மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரில் டீக்கடைகள் அடைக்கப்பட்டிருக்கும் என்று டீக்கடை சங்கம் அறிவித்துள்ளது.

வணிகர் சங்கங்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இறைச்சி கடைகள் இன்று (வியாழக்கிழமை) ஒரு நாள் மட்டும் அடைக்கப்பட்டிருக்கும் என்று சென்னை ஆட்டு இறைச்சி(சில்லரை) வியாபாரிகள் சங்க பொதுச்செயலாளர் எம்.அன்வர் பாஷா குரேஷி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறும்போது, ‘அன்னிய முதலீட்டை அனுமதிக்கும் மத்திய அரசை கண்டித்து நடைபெற இருக்கும் கடையடைப்பு போராட்டத்தில், சென்னையில் எங்கள் சங்கத்தில் இணைக்கப்பட்டுள்ள 4 ஆயிரம் மட்டன் கடைகள் இன்று அடைக்கப்பட்டிருக்கும்’ என்று குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு சங்கங்களும் வணிகர்களின் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து உள்ளதால் சென்னையில் ஜவுளிக்கடைகள், நகைக்கடைகள், ஓட்டல்கள், சிறு பெட்டிக்கடைகள், காய்கறி மற்றும் இறைச்சி கடைகள் முழுவதுமாக அடைக்கப்பட்டிருக்கும். அதே நேரத்தில் மருந்து ஸ்டோர் உள்ளிட்ட அத்தியாவசிய கடைகள் திறந்திருக்கும்.

10 ஆயிரம் போலீஸ் பாதுகாப்பு

கடைகள் அடைப்பு போராட்டத்தையொட்டி, சென்னையில் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறாமல் தடுப்பதற்காக 10 ஆயிரம் போலீசார் பாதுகாப்புக்காக குவிக்கப்படுவார்கள் என்று உயர் போலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நாளை (இன்று) அதிகாலை முதல் போலீசார் பாதுகாப்பு பணியில் சென்னை முழுவதும் ஆங்காங்கே இருப்பார்கள் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். முக்கிய ரோடு சந்திப்புகளில் போலீஸ் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இதேபோல் தமிழகம் முழுவதும் பாதுகாப்பு பணியை பலப்படுத்த டி.ஜி.பி. ராமானுஜம், கூடுதல் போலீஸ் டி.ஜி.பி. ஜார்ஜ் ஆகியோர் அனைத்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகளுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

---

## டாலருக்கு எதிராக ரூபாய் மதிப்பு சரிவால்

## மின்சாரம், உர நிறுவனங்களுக்கு ரூ.3,400 கோடி கூடுதல் செலவினம்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

அமெரிக்க டாலருக்கு எதிராக இந்திய ரூபாயின் வெளிமதிப்பு சரிவடைந்து வருகிறது. இதனையடுத்து, ஓ.என்.ஜி.சி. மற்றும் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் போன்ற நிறுவனங்களிடமிருந்து இயற்கை எரிவாயுவை கொள்முதல் செய்யும் மின்சாரம் மற்றும் உரத்துறை நிறுவனங்களுக்கு கூடுதலாக ரூ.3,400 கோடி செலவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

டாலரில் நிர்ணயம்

கடந்த ஆண்டு மே மாதத்தில் மத்திய அரசு இயற்கை எரிவாயு விலையை டாலரில் நிர்ணயம் செய்ய வேண்டும் என தெரிவித்தது. இதனால், மின்சாரம் மற்றும் உர உற்பத்திக்காக இயற்கை எரிவாயுவை பயன்படுத்தும் நிறுவனங்கள் அதற்கான கட்டணத்தை டாலரில் செலுத்த வேண்டிய நிலை உருவானது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஒரு அமெரிக்க டாலரின் வெளிமதிப்பு ரூ.44–ஆக இருந்தது. இது, தற்போது ரூ.52–ஐ தாண்டி உள்ளது. ஆக, ஒரு நிறுவனம் 10 கோடி டாலர் மதிப்பிற்கு இயற்கை எரிவாயு கொள்முதல் செய்தால், அந்நிறுவனத்திற்கு தேவைப்படும் தொகை ரூ.4,400 கோடியிலிருந்து ரூ.5,200 கோடியாக உயர்ந்துவிடும். அதாவது, கூடுதலாக ரூ.800 கோடி செலவு ஏற்படுகிறது.

இதனையடுத்து, நிறுவனங்கள் மின்சார கட்டணம் மற்றும் உரம் விலையை உயர்த்த வாய்ப்புள்ளது. ஆக, நுகர்வோர்களுக்கு பாதிப்பு ஏற்படும் நிலையில் இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு இது சாதகமான அம்சமாகும்.

ஓ.என்.ஜி.சி.

பொதுத் துறையை சேர்ந்த ஓ.என்.ஜி.சி. நிறுவனத்துக்கு ரூபாய் மதிப்பு சரிவால் இயற்கை எரிவாயு விற்பனை வாயிலாக ஆண்டுக்கு கூடுதலாக ரூ.1,826 கோடி வருவாய் கிடைக்கும். முகேஷ் அம்பானி தலைமையின் கீழ் செயல்படும் தனியார் துறையைச் சேர்ந்த ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீசுக்கு கிடைக்கும் கூடுதல் ஆதாயம் ரூ.1,584 கோடியாக இருக்கும்.

---